பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 11 2025 6 45

புதன்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. அரசியல் சாசன தினம், நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

2. காசி தமிழ்ச் சங்கமம் அடுத்த மாதம் நடைபெற இருப்பதையொட்டி காசியின் வளமான பாரம்பரியத்தையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் வாரணாசியில் ரங்கோலி போட்டி நடைபெற்றது.

3. ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் பணியில் தொடர ஏதுவாக, கல்வி உரிமை மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டங்களை திருத்துமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசன ஆதாரமாகத் திகழும் 58 கிராம கால்வாயை தூர்வார வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டியதையடுத்து, கேரளாவின் இடுக்கி மாவட்ட கரையோரப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அரசியல் சாசன தினம், நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது. “எனது அரசியல் சாசனம் - எனது பெருமை” என்பதே, இந்த ஆண்டின் மையக் கருத்து ஆகும்.

இந்திய அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன், 76-ம் ஆண்டு தினத்தையொட்டி, நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெறும் விழாவில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்நாளையொட்டி, மலையாளம், தெலுங்கு, மராத்தி, கஷ்மீரி, பஞ்சாபி, ஒடியா, அஸ்ஸாமீஸ், போடோ, மற்றும் நேபாளி ஆகிய 9 மொழிகளில், அரசியல் சாசன மொழிபெயர்ப்பும் இன்று வெளியிடப்படுகிறது.

அதேவேளையில், நகரங்கள், கிராமம் என நாடு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளில், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் பங்கேற்று, அரசியல் சாசனத்தின் முகப்புரையை வாசிக்க உள்ளனர்.

மத்திய - மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சார்பில், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமத்தின் நான்காம் ஆண்டு விழா அடுத்த மாதம் நடைபெற இருப்பதையொட்டி வாரணாசியில் உள்ள Assi Ghat பகுதியில் நடத்தப்பட்ட ரங்கோலி போட்டியில் ஏராளமானோர் பங்கேற்று காசியின் வளமான பாரம்பரியத்தையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் கோலங்களை தீட்டினர்.

பனாராஸ் இந்து பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், காசிவிஸ்வநாதர் கோயில் மாதிரிகள் உட்பட நாட்டுப்புறக் கலை, கட்டடக்கலை, புராணங்கள் மற்றும் காசியிலும், தமிழகத்திலும் உள்ள கலாச்சார சின்னங்களை எடுத்துரைக்கும் விதமாக இடம்பெற்ற கோலங்கள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

இந்தப் போட்டி நாட்டின் கலாச்சார ஒற்றுமைக்கு உதாரணமாக அமைந்ததுடன், காசி தமிழ்ச் சங்கமத்தின் நோக்கங்களை வலுப்படுத்துவதாக இருந்தது என்று போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் பணியில் தொடரவும், பதவி உயர்வு பெறவும் ஏதுவாக, கல்வி உரிமைச் சட்டம் மற்றும் தேசிய ஆசிரியர் கல்விக் குழும சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், தற்போது பணியில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் 2 ஆண்டுகளுக்குள் TET தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும், 5 ஆண்டுகளுக்கும் குறைவாக பணிக்காலம் உள்ள ஆசிரியர்கள் இத்தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால் பதவி உயர்வுக்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை சுட்டிக்காட்டியுள்ளார்.

2010ஆம் ஆண்டுக்கு முன்பு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இதுபோன்ற தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்ததாக கூறியுள்ள அவர், உச்சநீதிமன்ற தீர்ப்பால் 2 ஆண்டுகளுக்குள் TET தேர்வில் தேர்ச்சி பெறாத ஆசிரியர்களின் பணி பறிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் மட்டும் சுமார் 4 லட்சம் ஆசிரியர்கள் பாதிப்புக்கு ஆளாகும் நிலை உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது மாநிலத்தில் நிர்வாக ரீதியாக சிக்கலை உருவாக்கும் என்பதால் பிரதமர் திரு. நரேந்திர மோடி இப்பிரச்சினையில் தலையிட்டு ஆசிரியர்களின் நலனைப் பாதுகாப்பதுடன், குழுந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசன ஆதாரமாகத் திகழும் 58 கிராம கால்வாயை முறையாக தூர்வார வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வைகை அணை நிரம்பி தேனி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோதிலும் இந்தக் கால்வாயில் உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படாததால் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

பொதுமக்களின் போராட்டத்திற்குப் பிறகு கால்வாயை முறையாக சுத்தம் செய்யாமல் தற்போது திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீரும் இத்திட்டத்தால் பயனடையும் கிராமங்களை சென்றடைவதில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டியது.

இதையடுத்து கேரளாவின் இடுக்கி மாவட்ட கரையோரப் பகுதிகளுக்கு முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்டம் உடுமைலைப்பேட்டை அருகே உள்ள திருமூர்த்தி மலை பஞ்சலிங்க அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுகளுக்கு தொடர்ந்து நான்காவது நாளாக இன்றும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் பதவி விலக வேண்டும் என்று அவாமி லீக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

-------------

நேபாளத்தின் ஜனக்பூரில் உள்ள ஜானகி கோவிலில், ராமபிரான் - சீதா தேவி திருமணம் நடைபெற்றதைக் குறிக்கும் விவா பஞ்சமி கொண்டாடப்பட்டது.

-------------

சுகாதார ஆராய்ச்சிக்கான ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் குறித்து CSIR மற்றும் ICMR அமைப்புகளுக்கு இடையேயான கலந்தாலோசனைக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

-------------

மயிலாடுதுறை - தரங்கம்பாடி இடையே ரயில்சேவை தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், இந்த வழித்தடத்தில் மீண்டும் ரயில் சேவை தொடங்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-------------

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்தநாளை முன்னிட்டு, மேரா யுவ பாரத் அமைப்பின் சார்பில் திண்டுக்கல்லில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற ஒற்றுமைப் பேரணியில் தேசியக் கொடியுடன் மாணவர்கள் பங்கேற்றனர்.

-------------

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் சென்னை கிளை சார்பில் அலுமினிய கண்டக்டர்களின் தர நிலை குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

-------------

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணி வீரர்கள் மாமல்லபுரம் கடற்கரைக் கோவிலை கண்டு ரசித்தனர்.

-------------

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சமையல் எரிவாயு நுகர்வோர் குறைதீர்ப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாளை நடைபெறும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதி பழங்குடியின விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக கருமிளகு சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

-------------

கார்த்திகை சோமவாரத்தை முன்னிட்டு காரைக்கால் ஸ்ரீ நித்ய கல்யாணி சமேத ஸ்ரீ நித்தீஸ்வரர் கோவிலில் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம் நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று சீன தைபே அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி குஜராத்தின் அகமதாபாதில் இரவு மணி 7.30க்கு நடைபெறுகிறது.

-------------

சையத் முஸ்தாக் அலி கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<The End>>>>